# BLESSED IN A WIFE

An adaptation of Mr. V. V. Srinivasa Iyengar's
Drama of the same name
IN TAMIL

BY

**Rao Bahadur P. SAMBANDAM,**
B.A., B.L.,

Author of:

"Lilavathi-Sulochana," "Galava," "Manohara," "Blind Ambition," "The Two Friends," "Fate and Love" "Sarangadhara," "Simhalanatha," "Pushpavalli," "Amaladitya," "Magapathi," "Farces," "Siruthondar," "The Golden Fetters," "True Love," "The Bandit Chief," "Markandeya," "The Fair Ghost," "The Merchant of Vanipura," "The Wedding of Valli," "The Eye of Love," "Vijayarangam," "As you like it," "Ratnavali," "Lord Buddha," "The Tragedy of Silence," "The Good Fairy," "Geetha Manjari," "Harischandra," "As We Sow-So We Reap," "The Curse of Oorvasi," "Chandrahari," "The Demon Land," "Sabapati Part I," "The Pongal Feast" or "Sabapathy," (Part II) A Rehearsal or "Sabapathy," (Part III) etc. in Tamil, and "Harischandra," and "Yayathi" in English.

***FIRST EDITION.***

Madras:

PRINTED BY DOWDEN AND CO., AT THE "PEERLESS PRESS,"
21, Sunkurama Chetty Street.

1928

*All Rights reserved.*

[Price per Copy

# மனைவியால் மீண்டவன்

இஃது

ராவ் பஹதூர்

ப. சம்பந்த முதலியார், பி-ஏ., பி-எல்.,

அவர்களால் இயற்றப்பட்டது.

(ம-ா-ா-ஸ்ரீ, வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் இயற்றிய நாடகத்தின் மொழி பெயர்ப்பு)

(இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :—
"லீலாவதி சுலோசனை," "கள்வர் தலைவன்," "மனோஹரன்," "இரண்டு நண்பர்கள்," "சாரங்கதரன்," "நற்குல தெய்வம்," "சத்ருஜித்," "யயாதி" "மார்க்கண்டேயர்," "விஜயரங்கம்," "காதலர் கண்கள்," "பேயல்ல-பெண்மணியே," "மகபதி," "மெய்க்காதல்," "பொன் விலங்குகள்," "சிம்ஹளநாதன்," "விரும்பிய விதமே," "சிறுத்தொண்டர்," "காலவரிஷி," "வாணீபுர வணிகன்," "ரஜபுத்ரவீரன்," "ஹரிச்சந்திரன்," "ரத்னாவளி," "புஷ்பவல்லி," "கீதமஞ்சரி," "பிரஹசனங்கள்," "ஊர்வசியின் சாபம்," "அமலாதித்யன்" "சபாபதி," "பொங்கல் பண்டிகை" அல்லது சபாபதி இரண்டாம் பாகம், "ஓர் ஒத்திகை" அல்லது சபாபதி மூன்றாம்பாகம், "வள்ளிமணம்" "முற்பகற்செய்யின் பிற்பகல் விளையும்," "புத்த அவதாரம்," "வேதாள உலகம்," முதலியன.

முதற் பதிப்பு

சென்னை:
டௌடன் கம்பெனியாரின்
"பியர்லெஸ்" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1928

காபி ரைட்]

[விலை

1-50

INSCRIBED

TO

THE BELOVED MEMORY OF

**MY PARENTS**

P. VIJIARANGA MUDALIAR,

and

P. MANICKAVELU AMMAL,

and

**MY FRIEND**

C. RANGAVADIVELU

# PREFACE

*TO THE FIRST EDITION*

---

This is an adaptation of an English drama of the same name by my friend Mr. V. V. Srinivasan. I have to thank him for his having kindly given me permission to translate his work. The request of several societies, that I should give them something in Tamil, which could be enacted in an hour and a half, for an aniversary or so, has induced me to translate this and other works of my friend, into Tamil.

I take this opportunity to inform all societies, amateur and professional, that they should obtain my previous permission before staging this or any other drama of mine. Societies will kindly note that as the law stands at present breach of copy-right in a drama is a criminal offence.

"PAMMAL LODGE"
MADRAS
1st May 1928.

THE AUTHOR.

# நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| ராமநாதன் | ... | ஓர் பெருஞ் செல்வவந்தனுக்கு ஸ்வீகார புத்திரன். |
| லலிதை | ... | ராமநாதன் மனைவி. |
| பார்வதி | ... | ராமநாதனை ஸ்வீகாரஞ் செய்து கொண்டவருடைய விதவை. |
| டாக்டர் நாயுடு | ... | ராமநாதன் குடும்பத்திற்கு சிநேகிதரும் வயித்தியரும். |
| மிஸ் தாரன் | .... | ஒரு நர்ஸ். |

கதை நிகழ் இடம் :—சென்னை.

# மனைவியால் மீண்டவன்

## முதல் அங்கம்

### முதல் காட்சி

இடம்—மயிலாப்பூரில் "சந்திரவிலாஸ்" என்னும் பங்களாவில் ஓர் அறை
காலம்—காலை.

ஒரு கையில் பையும் மற்றொரு கையில் ஹிருதயம் பரீட்சிக்கும் கருவியும் வைத்துக்கொண்டிருக்கும் டாக்டர் விஜயம் நாயுடு என்பவர் முகத்தில் மிகவும் வருத்தமும் கவலையும் விளங்க லலிதாவுடன் பேசிக்கொண்டிருக்கிறார்.

டா. குணமா ?—உம்—இல்லை—இன்னும்.

ல. குணமாகும்—இன்றைக்கு—என்று நம்பினீரே ?

டா. நம்பினேன்—நம்புவது சகஜம்தானே எல்லோர்க்கும்—எப்பொழுதும்.

ல. அவ்வளவுதானா? கோரிக்கையை விட விசேஷம் ஏதாவது இருக்கலாமோ—என்று எண்ணினேன்.

டா. ஆம் ஆம் !—என்னை மன்னிப்பாய்—அப்படித்தான்—வீக்கம் குறையும் என்று எண்ணினேன். அவனுடைய புத்தி மாறாட்டம் அதிகமாயில்லை—அவனுடைய ஹிருதயம்தான் எனக்குத் திருப்திகரமாயில்லை.

ல. ஹிருதயமா ?—அது எப்பொழுது திருப்திகரமாயிருந்தது !—ஆயினும்—முன்பைவிட அதிக க்ஷீணதசையிலிருக்கிறதா ? கொஞ்சமாவது குணமாக இடமிருக்கிறதென்று நினைக்கிறீர்களா ?—நான் கேட்பது உங்களுக்குத்தெரியவில்லையா ?

டா. இதோ பார்—லலிதா!—உன்னை என் பெண்ணாகவே நான் பாவித்திரா விட்டால்—உம்—நீ புத்திசாலி, உன்னிட மிருந்து ஒளிப்பதிற்பயனில்லை—அவன் இன்னும் அபாயமான ஸ்திதியில் தான் இருக்கிறான்.

ல. இந்த மூன்று நாட்களாக நான் அதை அறிவேன். எதற்கும் சித்தமாயிருக்கிறேன்; என்னிடம் உண்மையை ஒளியாது உரையும்.

டா. இல்லையம்மா—அப்படி ஒன்றும் கைவிடக்காரணமில்லை; எப்படியாவது அவனைத் தப்ப வைப்பேன் என்று நினைக்கிறேன் இன்னும். இப்பொழுது ஒரு புதிய மருந்து கொடுத்திருக்கிறேன்—நான் மத்தியானம் வந்து பார்க்கிறேன்—எதற்கும் தைரியத்தைக் கைவிடாதே.

ல முயன்றாலும் முடியாதென்றால்!—அப்படிக் கைவிட்டாலும் எனக்கு என்ன கெட்டுப்போகிறது!—(பெருமூச்செறிந்து). நாள் முழுவதும் நான் இங்கே உட்கார்ந்து கொண்டு அந்த அறையையே பார்த்த வண்ணம் கழிக்கிறேன். டாக்டர், என்னை ஏன் உள்ளே போக விட மாட்டேன் என்கிறீர்?

டா. அவனைக் காப்பாற்றக்கூடும் என்று இன்னும் நான் எண்ணுவதனால் தான். எப்பொழுதாவது அவனுக்கும் கொஞ்சம் பிரக்ஞை வருகிறது—அச்சமயங்களில்—அந்த—பெண்பிள்ளையைப் பற்றிக்கேட்கிறான்—நான் சொல்வதைக்கேள், அந்த வார்த்தைகளைக் கேட்க உன் மனம் பொறாது.

ல. பொறுக்கும்! என்னை நன்றாய் அறியீர்—இப்பொழுது இருக்கும் ஸ்திதியில் என் மனம் இனி கரையாது—கஷ்டப்பட்டுப் பட்டுக் கல்லாய் விட்டது, நரகவேதனையை நான் அனுபவித்தாயது—உங்கள் பெண்ணோடு விளையாடிக்கொண்டிருந்த குழந்தை என்று எண்ணாதீர் இப்பொழுது என்னை!—ஈசா! ஈசா!—அவள் ஏன் போனாள்? நானல்லவோ போயிருக்கவேண்டும்!

டா. அப்படி போனது ஒரு வேளை அவள் அதிர்ஷ்டவசமோ என்னமோ! அவள் உயிருடன் இருந்திருந்தால் உன்னைப்போல் அவளும் கஷ்டம் அனுபவித்திருக்க வேண்டுமோ என்னவோ—யாருக்குத் தெரியும்?—உன்னுடைய தாய் தந்தையர்கள் இப்பொழுது உயிருடனிருந்து உன் கஷ்டத்தைக் கண்டிருப்பார்களாயின் என்ன துக்கப்பட்டிருப்பார்கள்?

ல. அவர்களுக்குப் பதிலாகத்தான் நீங்கள் இருக்கிறீர்களே—எனக்காகத் துக்கப்பட! அன்றைத்தினம்—அந்தப் பெண்பிள்ளை வீட்டிற்குப் போய்—அவரை எடுத்து வந்த பொழுது—அவர் பிணம்போல் கிடந்ததைக் கண்டபொழுது—கண்ணீர் விட்டழுதீரே! அப்பொழுது கேவலம் டாக்டராகத்தான் எண்ணிக்கொண்டீரோ உம்மை?—எல்லாம் எனக்குச் சொன்னார்கள்.

டா. உம்—சரி!—எனக்கு நேரமாகிறது—நான் போகவேண்டும்—சரியாக நாலு மணிக்கு இங்கு வருகிறேன்.

ல. டாக்டர்—உம்மை ஒன்று வேண்டிக்கொள்ளுகிறேன்—என்மீது மனமிரங்கி அதை மறுக்கலாகாது நீங்கள்.

டா. கேள் அம்மா—நீ வேண்டுவதை ஒன்றும் நான் மறுக்க மாட்டேன்—அதாவது, நியாயமாகக் கேட்பதை.

ல. ஈசனுக்குத்தான் தெரியும்-பிழைக்கப்போகிறாரோ இல்லையோ அவர்—என் புருஷன்—எனக்குத் தாலிகட்டினவர்! ஒரு வேளை பிழைத்தபோதிலும்—மறுபடியும் அவள் வீட்டிற்குப் போய்ச் சேரமாட்டார் என்பது என்ன நிச்சயம்? அதை நினைத்த போதிலும் என்னெஞ்சம் பகீர் என்கிறது!—நான் எதற்காக உயிர் வாழவேண்டும்? ஆயினும் என்னை அவருக்குக் கலியாணம் செய்து வைத்தார்கள்—அவருடைய கோரிக்கைக்கு விரோதமாக—நான் கைக்குழந்தையாயிருந்த பொழுது—இருந்தபோதிலும் உலகறிய, ஈசன் திருஉள்ளமறிய—அக்னிசாட்சி

யாய் நான் மணந்த புருஷன் அவர். ஆகவே, அவருடைய அந்திய காலத்திலாவது அவர் அருகில் இருந்து நான் ஏன் அவருக்கு சுஸ்ரூஷை செய்யலாகாது? தலையை அசைக்காதீர்கள்!—நான் அழுவதில்லை—பேசுவதில்லை—அவருக்கு ஒரு கஷ்டமும் கொடுப்பதில்லையென்று பிரமாணம் செய்து தருகிறேன்—அவர் நான் இன்னாள் என்றே அறியமாட்டார்.

டா. அது எப்படி சாத்தியம்?

ல. சாதிப்பது ஒன்றுமில்லையே! அவர் எப்பொழுதும் என்னை வெறுத்தார்—என்னைக் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை—என்முகமே தெரியாது. ஆயினும்—நீங்கள் சொன்ன பிற்பாடு—எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீங்கள் அனுப்புகிற—ஒரு நர்சைப்போல வேஷம் பூணுகிறேன்! அதிர்ஷ்டம் என்று பெயர் வைத்துக் கொள்ளுகிறேன். அவர்களைப்போலவெ சந்தடி செய்யாமல் நடந்து, சூத்திரப் பாவையைப் போல் எல்லா வேலைகளையும் பார்த்து வருகிறேன்!

டா. சபாஷ்—நீ ஒரு பெண்மணி! இது ஒரு நல்லயோசனை தான்—ஆனாலும் அந்தப் பரீட்சை இப்பொழுது பார்க்கக்கூடாது—நான் சாயங்காலம் வருகிறேன்.

ல. டாக்டர்! டாக்டர்! கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—இப்படி சொல்லிவிட்டுப்போய் விடாதீர்கள்—நான் அப்படி செய்யட்டுமா? ஆகட்டும் என்று சொல்லுங்கள்—ஒருவார்த்தை—எனக்காக!—உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

டா. எல்லாம் அப்புறம் யோசனை பண்ணிச் சொல்லுகிறேன்.

ல. அப்புறம் யோசனை பண்ணுகிறதாவது!—இன்னும் எத்தனை மணி நேரம் அவர் உயிருடன் இருக்கப் போகிறாரோ?

டா. நீ அவசரப்படக் கூடாதம்மா—லலிதா—நீ கேட்டதை நான் யோசனை பண்ணிப்பார்க்கிறேன், அதனால் ஒரு கெடுதியும் இல்லை என்று எனக்குத் தோன்றினால், உனக்கு உத்தரவு கொடுக்கிறேன், சாயங்காலம் வரையில் கொஞ்சம் பொறுத்துக் கொண்டிரு. ஆனபோதிலும்—நான் உனக்கு உத்தரவு கொடுத்தால், நீ நீலக்கண்ணாடி போட்டுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் அவனுக்கு சந்தேகமிராது—இல்லாவிட்டால் உன் கண்கள் உண்மையை வெளிப்படுத்திவிடும்.

ல. எதை வேண்டுமென்றாலும் செய்கிறேன்—எனக்கு உத்தரவு மாத்திரம் கொடுங்கள்.

டா. சரி—எல்லாம் நான் நன்றாய் யோசித்துச் சொல்லுகிறேன்—அதோ பார்! உன் மாமியார் வழி தடவிக் கொண்டு வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் என்னைக் கண்டுபிடித்து விட்டால், நான் சாயங்காலம் வரவேண்டும் என்கிற கஷ்டம் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை; நான் வருகிறேன்.

ல. டாக்டர், சாயங்காலம் வரையில் நான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆயினும் ஞாபகம் இருக்கட்டும், அப்புறம் வேண்டாம் என்று நீர் சொன்னால், நான் ஒப்பவேமாட்டேன்—நான் தீர்மானித்து விட்டேன்.

டா. என்ன லலிதா!—என்ன சமாசாரம்? என்ன அவ்வளவு கண்டிப்பாய்ப்பேசுகிறாய்?

ல. துரதிர்ஷ்டம் பிடித்த, அனாதையான, தாய் தந்தை யில்லாத ஒரு பெண், புருஷன் முகமெடுத்துப் பாராத பேதை, கண்டிப்பாய்ப் பேசி என்ன பிரயோஜனம்?

டா. ஆயினும் அப்படித்தானே பேசுகிறாய் நீ?

ல. ஐயோ! அப்படி யொன்றுமில்லை—உம்மிடம் நான் ஏன் சொல்லக்கூடாது? இன்றைத்தினம் அதிகாலையில் கனவொன்று கண்டேன். அது வாஸ்தவம் போலவே

யிருந்தது. நான் எப்படியும் அவரை மரணத்தினின்றும்—மரணத்தினும் கேடான கதியினின்றும்—காப்பாற்ற முடியுமென்றால்—என்று எனக்குள் ஏதோ தோற்றுகிறது. நான் முயன்று பார்க்க எனக்கு ஏன் நீங்கள் உத்தரவு கொடுக்கக்கூடாது ?

டா. ஆகட்டும்—உம்—யோசித்துப் பார்க்கிறேன்—நான் உடனே போகவேண்டும்.

பார்வதி கைத்தடியினால் மெல்ல வழியைத்
தடவிக்கொண்டு வருகிறாள்.

பா. அது யார் அது! டாக்டரா?—ஏன் அப்படி ஓடிப் போகிறீர்கள் ? நான் உங்களோடே பேச வருகிறேன் என்று? [லலிதா போகிறாள்.]

டா. இல்லை அம்மா, அப்படி ஒன்றுமில்லை. நான் பதினொரு மணிக்கு முன்பாக சேலத்திலிருந்து வந்திருக்கும் ஜமீந்தாரைப் பார்ப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

பா. என் மாட்டுப் பெண்ணிருக்கிறாளே—புண்யவதி!—அவள் உம்மோடு மூன்று மணி சாவகாசம் பேசிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறதே! எப்பொழுது இந்த சொத்தெல்லாம் தன் கைக்கு வரும் என்று ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தாளோ ?

டா. அம்மா, நீங்கள் சொல்வது எனக்கு அர்த்தமாக வில்லை.

பா. ஆம் ஆம், எப்படி அர்த்தமாகும் உமக்கு ? நான் தான் புத்தியில்லாதவளாச்சே. எனக்கென்ன எழுதப்படிக்கத் தெரியுமா ? நான் சொல்வது உங்களுக்கு என்னமாக அர்த்தமாகும்! என் மாட்டுப் பெண் சொல்வது மாத்திரம் உங்களுக்கு நன்றாக அர்த்த மாகிறதல்லவா !—ஏன்?

டா. சிலவேளைகளில்.

பா. நான் சொல்வது உமக்கு அர்த்தமாகாது, அர்த்தமாக வேண்டும் என்று இருந்தாலல்லவோ ?

டா. இது என்ன இப்படி பேசுகிறீர்கள் ?

பா. யாராவது உம்மிடம் உண்மையைப் பேசினால், அது உமக்கு ஆச்சரியமாயிருக்கிறாற் போலிருக்கிறது.

டா. உங்களை—நேற்று இன்று தெரியுமா என்ன, நிரம்ப நாளாகத் தெரியுமே எனக்கு !

பா. அது எப்படியிருந்தாலென்ன ?—நான் தான் கெழமாச்சே, கண்தெரியாதவள், அசங்கியம் பிடித்தவள்—கையிலே அரைக்காசு இல்லாதவள்—என்னை யார் கவனிக்கிறார்கள் ?

டா. வேறு யாரும் கவனிக்கா விட்டாலும்—சுவாமி கவனிப்பார்.

பா. ஆமாமாம்! என்னைப்பற்றி நீங்கள் எல்லாம் என்ன நினைக்கிறீர்கள் தெரியும் எனக்கு. இந்தக்கிழம் எப்பொழுது சாகும் என்று கோரிக் கொண்டிருக்கிறீர்கள்—நான் என்னமோ சாகப்போகிறதில்லை! நான் உயிரோடிருக்கிறது எல்லோருக்கும் கஷ்டம் தான்—இப்பொழுதே ஒரு தடையாயிருக்கிறேன்—இன்னும் என் மகனும் இறந்து விட்டால் இன்னும் பெரிய தடையாவேன்,

டா. அது ஏனம்மா, எப்பொழுது பார்த்தாலும் உம்முடைய மகன் சாகிறதைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? உம்முடைய ஸ்வீகாரப் புத்திரனாயில்லாது, உம்முடைய சொந்த புத்திரனாயிருந்தால் இப்படிப் பேசுவீரா ?

பா. மற்றவர்கள் எல்லோரையும்விட நான் அவன் மீது அதிகப் பிரீதி வைத்திருப்பது அந்தபகவானுக்குத் தான் தெரியும் !

டா. அந்த, மற்றவர்களுக்காக—நான் பரிதாபப்படுகிறேன்,

பா. என்னைப்பற்றியோ ? எனக்காகப் பரிதாபபட மாட்டீரா ? என் மகன் இறந்து போனால் என் கதி என்னவாகிறது ?

டா. அவன் இறந்து போவான் என்னும் கவலை உமக்கு வேண்டாம். அவன் பிழைக்கப் போகிறான்.

பா. அந்த வார்த்தையை நான் நம்பவே மாட்டேன். நீரும் அதை நம்பவில்லை, எனக்கு நன்றாய்த் தெரியும். அவனுக்கென்னவோ காலம் கிட்டிக் கொண்டிருக்கிறது; எனக்குத் தெரியாதா என்ன? வீட்டிலே இப்படிப்பட்ட மாட்டுப்பெண் வந்து சேர்ந்தால் வேறென்ன கதி வாய்க்கும்?

டா. ஆயினும், நீங்கள் தானே அம்மா, உங்கள் தாயாதியின் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கட்டிவைத்தீர்கள்.

பா. எனக்கு எப்படித் தெரியும், அவளுடைய தகப்பன் தாயார் அவளை இப்படிப்பட்ட யாருக்கும் அடங்காப்பிடாரியாக—தறிதலையாகப் பழக்கி வைப்பார்கள் என்று?

டா. அவள் இங்கே வந்து வாழ ஆரம்பித்த பிற்பாடு நீங்கள் நல்ல பழக்கம் பழக்கி வைத்திருக்கலாமே?

பா. அவளையா? பழக்குகிறதா? நான் அப்படி ஏதாவது செய்தால் வீட்டை விட்டுப்போக எனக்கு வழி காட்டுவாள்!

டா. இப்பொழுது அப்படிப் போக எனக்கு யாராவது வழி காட்டினால் நன்றாயிருக்கும்!—எனக்கு நிரம்ப நாழிகையாகிறது. அம்மா, கூடுமானால் இன்னொரு சமயம் இந்த முக்கியமான சம்பாஷணையை முடிப்போம்—இப்பொழுது நான் ஒரு இடத்திற்கு அவசரமாகப் போக வேண்டியதிருக்கிறது.

பா. டாக்டர்! டாக்டர்! இதற்குள்ளாகப் போய் விடாதீர்கள்—ஒரே வார்த்தை, கொஞ்சம் தயவு பண்ணுங்கள்—நாளை சாகக்கிடக்கிற கிழவி, கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்—இந்த சொத்துகளுக் கெல்லாம்

பின்னாலே ஒரு சச்சரவும் இல்லாதபடி, என் பிள்ளை உயிருடன் இருக்கும்பொழுதே—அதாவது நான் என்ன சொல்கிறேன் என்றால்— ஏதாவது நடக்காததன் முன்—ஒரு ஏற்பாடு செய்து விடவேண்டியது அவசியமில்லையா?

டா. இப்பொழுது என்ன ஏற்பாடு செய்யமுடியும்? அவன் தான் பிரக்ஞையில்லாதிருக்கிறானே! அவனுக்குக் கொஞ்சம் சுவஸ்தமாகிற வரையில் அந்த யோசனையே பண்ண முடியாது.

பா பிரக்ஞை யில்லாதிருக்கும் பொழுது கூட—அநேகம் பெயர்—உயில் எழுதி வைக்கிறதாக—நான் கேள்விப் பட்டிருக்கிறேனே ?

டா. போன ஞாயிற்றுக்கிழமை அவர் வீட்டிற்குப் போயிருந்தீரே, அவரைப் பார்க்க, அப்பொழுது, உங்கள் அக்காள் பிள்ளை, இதை உங்களுக்குக் கற்றுக் கொடுத்தாரோ ?—ஆமாம் ஆமாம், அவர் லாயர் ஆச்சுதே, இந்த விஷயங்களெல்லாம் மற்றவர்களைவிட அவருக்கு நன்றாய்த் தெரியுமல்லவா !

பா. என் மகன் இந்த நிலையிலே கிடக்கும்பொழுது, என் அக்காள் பிள்ளையைப் பார்ப்பதற்காவது, வேறு யாரைப் பார்ப்பதற்காவது, நான் எப்படி போயிருக்கக் கூடும்?

டா. எப்படி போயிருக்கக் கூடும் !—வேண்டுமானால் உமக்குச் சொல்லுவேன் விபரமாக—ஆயினும் எனக்கு நேரமாகிறது இப்பொழுது.

பா. ஆனால், வேறு வழி யில்லையா ? நீங்கள் சாட்சி போடுகிறதாக இருந்தால் கூட அவன், ஒரு உயில் எழுத முடியாதா ?

டா. முடியவே முடியாது !

பா. அப்பொழுது இந்த சொத்தெல்லாம் யாருக்குச் சேருகிறது ?

டா. அவனுடைய வார்சுக்கு.

பா. அவனுக்குத் தான் வார்சு ஒருத்தருமில்லையெ—பெண், பிள்ளை, ஒன்றுமில்லையெ! அப்படி எதாவது இருந்தால் இப்படி அழுவேனா நான்? அவனுடைய பெண்சாதியின் அண்ணன் தம்பிமார் வந்து எல்லா வற்றையும் நிச்சயமாகக் கொண்டு போய் விடுவார்கள்.

டா. அவன் பெண்சாதி அவ்வளவு மட்டியல்ல.

பா. அது என்னமோ வாஸ்தவம்—எனக்குத் தெரியாதா என்ன? அவள் மாமியாரிடத்தில் கெட்டிக்காரியாகயிருக்கலாம், சொந்த அண்ணன் தம்பிகளிடத்தில் இந்த கெட்டிக்காரத்தனம் சாயுமா?

டா. ஏனம்மா, அவளுடைய அண்ணன் தம்பிகள் இந்த சொத்தைக் கொண்டு போனால் உமக்கென்ன கெட்டுப்போச்சுது? நீங்கள் சவுக்கியமாக வாழ்வதற்குத்தான் உங்களுக்கு வேண்டியதிருக்கிறதே.

பா. என் புருஷன் சொத்தை—அன்னியர்கள் கொண்டுபோக—அதைப் பார்த்து நான் வாழ்ந்திருக்க மாட்டேன்.

டா. அந்தக் கஷ்டம் உமக்கு வேண்டியிராது—அன்றியும் உமது மாட்டுப் பெண் உமக்கு அன்னியள் அல்லவே.

பா. என் பிள்ளைக்குப் பிற்காலம் என் புருஷன் சொத்துக்கு நான் தானே வார்சு?

டா. சரி—அப்படியிருந்தால்—உங்களுக்குத் தான்வரும். இப்பொழுது எனக்குப்போக விடைகொடுங்கள்.

பா. ஆஹா! அப்படி நினைக்கிறீர்களா நீங்கள்—ஆகவே அப்பொழுது ஒரு கஷ்டமும் இராதே?

டா. நான் நினைக்கிறபடி—ஒரு கஷ்டமுமிராது.

பா. அப்பா! என் மனதில் இருந்த பெருங்கவலை போச்சுது. நானும் அப்படித்தான் நினைத்தேன்—டாக்டர், நீங்கள்

நிரம்பபுத்திசாலியாச்சுதே! எப்படியாவது என் பிள்ளையை சுவஸ்தப்படுத்துவீர்கள் என்று எனக்குத் தெரியும்

டா. உம்—உங்களுடைய—ஆசீர்வாதத்தினாலும்—நல் எண்ணத்தினாலும் அப்படியே ஆகுமென நம்புகிறேன்.

[போகிறார்

காட்சி முடிகிறது.

---

# இரண்டாவது அங்கம்

## முதல் காட்சி.

இடம்—நோயாளி படுத்திருக்கும் அறை.

ராமநாதன் படுக்கையின் மீது படுத்திருக்கிறான்.

காலம்—சாயங்காலம்.

டாக்டர் நாயுடும், லலிதாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ல. டாக்டர், நாம் அந்த அறைக்குப் போய்ப் பேசுவோமே.

டா. டாக்டருக்கு அவருடைய வேலை தெரியும், ஒரு நர்சா அவருக்கு அவருடைய வேலையைச் சொல்லிக்கொடுக்க வேண்டும்?

ல. நாம் பேசும் சத்தடியினால் அவர் ஒரு வேளை விழித்துக் கொண்டால்?

டா. கொஞ்சம்—நீ—அவ்வளவு பரிவு பாராட்ட வேண்டியதில்லை இப்பொழுது. இன்னும் எட்டுமணி நேரம்வரையில், நீ என்ன தான் செய்தபோதிலும் அவனை விழிக்கச் செய்யமுடியாதுன்னால், நாளை சூர்யோதயம் அவனுக்கு பிரக்ஞைவரும், வியாதியின் கொடுமை நீங்கி சுவஸ்தமாகும் மார்க்கத்திற்றிரும்புவான், அப்புறம் நாம் பயப்பட வேண்டியதில்லை.

ல. நல்ல வழியில் திரும்பும் பொழுதெல்லாம், நமக்கு சூர் யோதயம் தானே? இனிமேல் பயம் ஒன்றுமில்லையென்று நினைக்கிறீர்களா டாக்டர்?

டா. ஆமாம் குழந்தை,—இந்த வியாதிவரைக்கும் அபாய மில்லை.

ல. டாக்டர்!—உங்களுக்கு நான் என்னகைம்மாறு செய்யப் போகிறேன்? இந்த ஏழுதினங்கள் தான் என் வாழ்நாட் களில் நான் மிகவும் சுகமாய்க்கழித்த தினங்கள்!

டா. உயிர் நிற்குமோ போகுமோ, என்று ஊசலாடிக் கொண்டிருந்த கவைக்குதவாத உன் கணவனைக்கண் கொட்டாது கவனித்து, அவனுக்கு சுஸ்ருஷை செய்து கொண்டிருந்ததா? சந்தோஷம் என்கிற பதத்திற்கு உன் வியாக்கியானம் வெகு விந்தையானதே?

ல. இப்படி — சந்தோஷமாயிருந்தாற் போது மெனக்கு. இப் படிப்பட்ட கடுமையானகஷ்டத்திலும் ஒருவித சுகமிருக் கின்றது.

டா. அம்மா, இந்த விஷயங்களெல்லாம் எங்கள் வயித்திய சாஸ்திரத்திற்குள் அடங்கவில்லை—ஆகவே இதைப் பற்றி உன்னிடம் வாதாட எனக்கிஷ்டமில்லை. ஆயினும் இதோபார்! நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்—மிக வும் ஜாக்கிரதையாய்—அவன் விழித்தவுடன் —

மிஸ் தாரன் என்னும் நர்ஸ் வருகிருள்.

மி. தா. ஐயா, அந்த கிழவி அம்மா, இவருடைய தாயார், பக்கத்தறையிலிருக்கிருர்கள், இங்கே வந்து, தன் பிள் ளையைப் பார்க்கவேண்டும் என்று ஒரேபிடிவாதமாகச் சொல்லுகிருர்கள்.

டா. அந்த அம்மா எப்பொழுது திரும்பிவந்தார்கள்? அன் றைத்தினம் மத்தியானம் உன்னுடன் சண்டைபோட்ட பிறகு, தன் அண்ணன் மகன் வீட்டிற்கு—அந்தலாயர்

வீட்டிற்குப்—போய் விட்டார்களென்றல்லவோ நினைத்தேன்.

மி. தா, இப்பொழுது தான் கொஞ்சம் நிமிஷங்களுக்கு முன்பாகத் திரும்பிவந்திருக்க வேண்டும். ஒரு வேளை வேலைக்காரர்கள்—உம்—நான் என்ன செய்வது? நான் சொல்வது என்னவென்றால்—நான் அவர்கள் உள்ளே வாராதபடி எப்படி தடுப்பது?

டா. அந்த வேலையை எனக்கு விட்டுவிடு, நான் பார்த்துக் கொள்ளுகிறேன் வாராதபடி. (கொஞ்சம்தூரம் போய் நிதானித்துத் திரும்பிவந்து) அம்மா, அதிர்ஷ்டம், நான் சொன்னது ஞாபக மிருக்கட்டும். நீ மிகவும் ஜாக்கிரதையாக யிருக்கவேண்டும். அவர் உன்னை—நீ அவரைத் தொந்திரவு செய்யாதே; அவர் எதிரில் அடிக்கடி போகாதே—அவர் நிம்மதியாயிருக்க வேண்டியது நிரம்ப அவசியம்; நான் சொல்வது உனக்கு அர்த்தமாகிறதே?

ல. அப்படியே ஐயா. [டாக்டர் போகிறார்.]

மி. தா. அந்த கிழவி அம்மா, இங்கே வந்து என்ன செய்ய வேண்டுமென்கிறார்கள்? நிரம்ப தத்தளித்துக்கொண்டிருப்பவர்கள் போல் காணப்பட்டார்கள். அந்த அம்மா நிரம்ப விந்தையானவர்களாயிருக்கிறார்கள்.

ல, எப்பொழுதும் இப்படித்தான்.

மி, தா, அவர்களை உனக்குமுன்பே தெரியுமோ? எத்தனை காலமாகத்தெரியும்?

ல, ஒரு விதமாகத் தெரியும்—எத்தனை நாளாகத்தெரியும் என்பது எனக்கு ஞாபகமில்லாதிருப்பதே நல்லது.

மி. தா. அந்த அம்மாளிடம் உனக்கேதோ பயமிருக்கிறாற் போலிருக்கிறதே, அவர்கள் இங்கே வந்தால் என்ன? காலைவரையில் நோயாளி கண் விழிக்கமாட்டார் என்று டாக்டர் தான் சொன்னாரே.

ல. உம், அப்படி இருந்தால்—அது எல்லாம் எனக்குத்தெரியாது—எது எப்படியிருந்த போதிலும் ஒரு ஏற்பாடு ஏற்பாடுதானே; இப்பொழுது வரும்படி விட்டால் ஒவ்வொரு மணியும் உள்ளேவர வேண்டுமென்று கேட்பார்கள். எப்படியோ அந்த அம்மாள் எனக்குப் பிடிக்கவில்லை.

மி, தா. பாவம்! கிழவி அம்மா! அவர்களே சொல்கிறபடி, இன்னும் எத்தனை நாள் உயிரோடிருக்கப் போகிறார்கள்—எனக்கு ஒரு ரூபாய் கூட கொடுத்தார்கள்.

ல. என்ன! லஞ்சமா வாங்குகிறாய்? எப்படி மனம் துணிந்தது? இதை நான் டாக்டருக்குத் தெரிவிக்கவேண்டும்.

மி.தா. நான் ஒன்றும் தப்பு செய்யவில்லையே! இனாமாகக் கொடுத்தது தானே; அதைப்பற்றி நீ இவ்வளவு கோபம் கொள்வதானால், இதோ போய் அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். [போய்க்கொண்டு]

ல. வெளியே போகும் பொழுது கதவைச் சாத்திக்கொண்டு போ, உன்னுடைய, பாபம் கிழவி அம்மாள், உள்ளேவராதபடி பார்.

பார்வதி வருகிறாள்; மிஸ் தாரன் போகாது நின்றுவிடுகிறாள்.

மி.தா. இந்தாங்க அம்மா உங்கள் ரூபாய்—நீங்கள் இங்கே உள்ளே வரக்கூடாதாம்.

பா. என்ன ரூபாயா? என்னுடைய தல்ல அது! நான் எப்பொழுது கொடுத்தேன் உனக்கு? நான் உள்ளே வரக்கூடாதென்று யார் சொல்லுகிறது? இது என் வீடு! என்னையார் கேட்பது?

மி.தா. அந்த அம்மா—டாக்டர் கண்டிப்பாய் உத்தரவு செய்திருக்கிறார்.

பா. இந்த வீடு டாக்டருக்குச் சொந்தமாக வில்லை—இன்னும். ஸ்வாமியினுடைய தயவினாலே என் பிள்ளை இன்

னும் உயிரோடுதான் இருக்கிறான். ஆனாலும்—அந்த சின்ன அம்மா எங்கே?—புண்யவதி-என் மாட்டுப்பெண்? டாக்டர் சொன்னாரே அவள் இங்கிருப்பதாக.

ல. டாக்டரா?—அப்படி இருக்குமா?—அம்மா, ஒருவேளை அவள் இந்த அறையில் இருப்பதாக நீர் நினைத்தால் நீங்கள் உள்ளே போகமாட்டீர்கள் என்று நம்பி உங்களுக்கு இவ்வாறு டாக்டர் சொல்லியிருக்க வேண்டும். கொஞ்சம் தயவுசெய்து இந்த அம்மாளை அறைக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய்விடு-கொஞ்சம் தயவுசெய்.

பா. நீயாரம்மா அது ? நீ என்ன செய்கிறாய் இங்கே?

ல. நாங்கள் இருவரும் இந்த நோயாளிக்கு நர்சுகள்; அவருக்கு சுஸ்ரூஷை செய்கிறோம்.

பா. உன் குரல்—தெரிந்த குரலாயிருக்கிறது—எதோபார்ப்போம்—ஓ! நீயா அது! நினைத்தேன் நினைத்தேன்! அப்பொழுதே சந்தேகப்பட்டேன்; அப்படியா சமாசாரம்! இப்பொழுது எல்லாம் பட்டப்பகலாய்த் தெரிகிறது. அந்த பெண்பிள்ளை வீட்டில் நீ தான் அவனுக்கு ஏதோ மருந்துவைத்து, இவ்வாறு நோயுண்டாக்கி, அவனுக்குப்பயித்தியம் பிடிக்கச் செய்தாய்! இப்பொழுது அவனை இங்கே கொண்டுவந்து, கொல்லப் பார்க்கிறாயா? ஆகட்டும்! ஆகட்டும்! இதோ போய் ஊரெல்லாம் குழப்பம் பண்ணுகிறேன்,—ஒருகிழவி என்ன செய்யக் கூடுமென்பதை அறிவாய் உடனே! அப்படியா சமாசாரம்!

ல ஐயோ! என்ன பெண்ஜென்மம்!—அம்மா, இந்த பயமுறுத்தலுக்கெல்லாம் நாங்கள் அஞ்சமாட்டோம். உங்கள் புத்திகொஞ்சம் கெட்டுப் போயிருக்கிறது—உங்கள் பிள்ளையின் மீதுள்ள பிரீதியினால்—வேறென்ன காரணமிருக்கப் போகிறது! ஆயினும் இங்கே ஒன்றும் கலகம் செய்யாதீர். இன்னும் ஒருவார்த்தை பேசுவீரானால் பிறகு அதற்காக வருத்தப்படுவீர்கள். தயவுசெய்து போங்கள் வெளியே !

பா. இதோ உடனே போகப் போகிறேன்—எங்கே தெரியுமா?

ல. எனக்கு அவசியமில்லை. அந்த கிழ அம்பட்டனிருப்பிடம் கண்டுபிடித்து விட்டோம், அவன் உயிருடன்தானிருக்கிறான், அவன் ஒரு பொய்யும் சொல்லமாட்டான்—போங்கள் வெளியே!

பா. கிழ அம்பட்டனா! ஐயோசாமி! கிழ அம்பட்டர்களைப் பற்றி எனக்கென்ன தெரியும்? நீ என்னமோ மறைத்து வைத்துப் பேசுகிறாய்; எனக்கொன்றும் அர்த்தமாகவில்லை! என்பிள்ளை உயிரோடிருக்கிறானா என்று நான் பார்த்து விட்டுப்போக வந்தேன்—பார்த்தாச்சுது—இனிமேலே எனக்கென்ன இங்கு வேலை! இதோ இந்த க்ஷணம் என் தமயன்பிள்ளை வீட்டுக்கு போகிறேன்—நீ என் பேரிலே கோபித்துக்கொள்ளாதே அம்மா நர்சே.

ல போங்கள்! [பார்வதி போகிறாள்.]

ஈசனே! ஈசனே! என்ன உலகம்!

மி. தா. நீங்கள் இரண்டு பெயரும் பேசிக்கொண்டது எனக்கொன்றும் அர்த்தமாக வில்லை, உங்களிருவருக்குள் ஏதோ ரகசியங்கள் இருக்கிறாற் போலிருக்கிறது. ஒருவருக்கொருவர் பயப்படுகிறாற் போலிருக்கிறதே.—என்ன ஆச்சரியம்! அந்த அம்மா எப்படி திடீரென்று அடங்கி விட்டார்கள்!

ல. குற்றமுள்ள நெஞ்சு அப்படித்தான் குறுகச்செய்யும்.

மி. தா. ஆயினும் ஏதோ அம்பட்டனைப்பற்றிச் சொன்னையே அது என்ன?

ல. அது ஒரு பெரிய வேடிக்கை!—இன்னொருசமயம் அதை உனக்குச் சொல்லுகிறேன்—மிஸ்தாரன், நாமிருவரும் கொஞ்சம் இளைப்பாறுவோம். நான் இங்கே பார்த்துக் கொள்ளுகிறேன்; நீ களைத்திருக்கிறாய், பக்கத்து அறைக்குப்போய் படுத்துறங்கு; வேண்டியதாயிருந்தால் உன்

மி. தா. வேண்டாம், இன்றிரவு நான் இங்கே பார்த்துக் கொள்ளுகிறேன். இது நியாயமல்ல, ஏழிராத்திரியாகக்கண் மூட இல்லையே நீ.

ல. எனக்கு அது பழக்கமாய் விட்டது; நிரம்ப சலாம், நீ போய் கொஞ்சம் இளைப்பாறு.

மி. தா. உன் இஷ்டப்படியே; டாக்டர் மாத்திரம் என் மீது கோபித்துக்கொள்ளாமலிருக்க வேண்டும்.

ல. அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன், குட்நைட்.

மி. தா. குட்நைட். [போகிறாள்.]

[லலிதை, நோயாளியைச் சற்று உற்றுப்பார்த்து விட்டு, பெருமூச்செறிந்து, ஒரு விளக்கைத் தவிர மற்றெல்லா விளக்குகளையும் அவித்து விட்டு, கை கூப்பி ஈசனைக்குறித்து தியானம் செய்துவிட்டு, பிறகு ஒரு சோபாவின்மீது சாய்கிறாள்.]

காட்சி முடிகிறது.

---

## இரண்டாம் காட்சி

இடம்—அதே இடம். காலம்—அதிகாலை.

ராமநாதன் படுக்கையின்மீது புரண்டு விழிக்க ஆரம்பிக்கிறான். லலிதா ஒரு பக்கமாய் அவனைக்கவனித்தவண்ணம் நிற்கிறாள்.

ரா. என்ன இது?—நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்?—சந்திரா—சந்திரா!

ல. அந்தப் பெண்பிள்ளையா!—இன்னும்!

ரா (கண்களை நன்றாய்த்திறந்து லலிதாவைப் பார்த்து) யார் நீ?—நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்?

ல. நீங்கள் உங்கள் சொந்த வீட்டில் இருக்கிறீர்கள்—உங்கள் படுக்கை அறையில்.

ரா. இல்லை—அப்படியல்ல—யார் நீ?

ல. நான்—உமக்கு சிகிச்சைசெய்து கொண்டிருக்கிறேன்—நர்ஸாக.

ரா. எனக்கென்ன உடம்பு அசௌக்கியமா?—எத்தனை நாளாக இப்படி இருந்தேன்?

ல. பிறகு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். டாக்டர் நீங்கள் பேசக்கூடாதென்று சொன்னார். ஆகவே தயவு செய்து பேசாமல் கொஞ்சம் நிம்மதியாயிரும்.

ரா எனக்கு தாகமாயிருக்கிறது; கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா குடிக்க.

ல. அது வேண்டாம், இரண்டு நிமிஷத்தில் சுடச்சுட கொஞ்சம் காபி கொண்டுவருகிறேன்; கொஞ்சம் கண்ணைமூடிக் கொண்டு நிம்மதியாயிரும்.

ரா. ஆம், சீக்கிரம்கொண்டுவா. (தூங்குவது போலக் கண்ணை மூடிக்கொள்கிறான். லலிதை வெளியே போய் காபி கொண்டுவருகிறாள்). கொண்டு வந்தாயா காபியை?

[உட்கார முயலுகிறான்.]

ல. வேண்டாம், நீங்கள் உட்காரக்கூடாது. இன்னும் உங்களுக்கு மிகவும் பலஹீனமாயிருக்கிறது. இந்த கரண்டியினால் உங்களுக்கு காபியைக் கொடுக்கிறேன்.

[அப்படியே செய்கிறாள்.]

ரா. அப்பா!—இப்பொழுது ரொம்ப பரவாயில்லை எனக்கு; அந்த காபி ரொம்ப நன்றாக இருந்தது என்றால்—நீயா செய்தாய் அதை?

ல. ஆமாம்.

ரா. கொஞ்சம் நிமிஷம் நான் உட்காரலாமா?

தயவுசெய்து முயன்று பார்க்காதீர்கள். அது உங்களுக்கு கஷ்டம்தரும்; இன்னும் கொஞ்சம் தூங்கிப் ங்கள்.

ரா. இல்லை, முடியாது என்னல்; அதிக நாழிகை தூங்கிவிட்டாற்போல் தோற்றுகிறது எனக்கு.

ல. கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டு பாருங்கள், தூக்கம் வரும் உங்களுக்கு. இன்னும் உங்களுக்கு மிகவும் பல ஹீனமாயிருக்கிறது.

ரா. நான் முயன்று பார்க்கிறேன்.

ல ஆமாம், பிரயத்னம் பண்ணிப் பாருங்கள். இன்னும் கொஞ்சம் நிம்மதியாக இளைப்பாறுவீரானல் உமக்கு நன்ருய் சுவஸ்தமாகிவிடும்—இன்னும் சில தினங்களில்.

ரா. சில தினங்களா?

ல. அதோ பாருங்கள்! மறுபடியும் பேச ஆரம்பிக்கா தீர்கள்!

[ராமநாதன் தூங்கப்பார்க்கிருன்; லலிதை சோபாவின் மீது சாய்ந்து கொள்ளுகிருள். ராமநாதன் சில நிமிஷங்களில் புரண்டு கண்விழிக்கிருன்.]

ரா. சந்திரா! சந்திரா!

ல. ஈசனே!

ரா. நர்ஸ்! உன் பெயர் என்ன?—என் சந்திராவை உனக்குத் தெரியுமா?—அவள் இப்பொழுது எங்கே இருக்கிருள்?

ல. அவள்—வெளியே போய்விட்டாள்—என்று நம்புகிறேன்.

ரா. வெளியேயா?—எங்கே போனுள்? எப்பொழுது திரும்பிவருவாள்?

ல. உம்—எனக்குத்தெரியாது—அது சொல்வது கஷ்டம்—ஆயினும் நான் விசாரித்துப்பார்க்கிறேன்.

ரா. அதிருக்கட்டும், இது எந்தவீடு? நான் அவள் வீட்டில் இருந்த ஞாபகம் இருக்கிறதே எனக்கு.

ல. ஆம் இருந்தீர்கள்—அப்படித்தான் எனக்குச் சொன்னார்கள். அங்கே உங்களுக்கு உடம்பு அசௌக்கியமாயிற்

ரும்—அப்பொழுது அவளுடைய வேலையாள் கொண்டு வந்து கொடுத்த மருந்தை நீர் சாப்பிட்டீராம்—நிரம்ப அசௌக்கியம் ஆகவே—உம்மை அவ்விடம் பார்த்துக் கொள்ள—உமக்கு சிகிச்சை செய்ய—ஒருவருமில்லாதிருக்க—டாக்டர் நாயுடு இதைக்கேள்விப்பட்டு—உங்களை இங்கே கொண்டுவந்தார். இப்பொழுது உங்களுக்கு நிரம்ப சவுக்கியமாயில்லையா?

ரா. ஓ!—அந்த மருந்து!—ஆம், அந்த மருந்து தான்!—ஆயினும் அந்த சந்திரா எப்பொழுது வருவாள்?

ல. அவள் எங்கே இருக்கிறாள் என்று கண்டு பிடிக்கப்பார்க்கிறேன். கொஞ்சம் தயவு செய்து நிம்மதியாயிரும். இல்லாவிட்டால் உங்களைப்பேச விட்டேன் என்று டாக்டர் என்னைக்கடிந்து கொள்வார், பிறகு என் வேலை போய்விடும்.

ரா. அப்படி இராது—நீ நிரம்ப நல்லவள்—நான் தூங்கிப் பார்க்கிறேன், எனக்கு உடம்பு சீக்கிரம் சுவஸ்தமாக வேணுமென்று விரும்புகிறேன். [தூங்கப்பார்க்கிறான்.]

காட்சி முடிகிறது.

---

# மூன்றும் அங்கம்

## முதல் காட்சி.

காலம்—சாயங்காலம்.

ராமநாதன் ஒரு பெரிய சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறான். லலிதா மருந்தை புட்டியினின்றும் வார்த்துக்கொண்டிருக்கிறாள்.

ல. இந்த மருந்தை தயவு செய்து சாப்பிடுங்கள்.

ரா. ஓ! பெரிய தொந்திரவாகப் போச்சு! எப்பொழுதுபார்த்தாலும் மருந்தும் மாத்திரையும், மாத்திரையும் மருந்தும்

தான்! எப்பொழுது இது எல்லாம் முடிகிறது? பதினைந்து நாளாச்சுதே!

ல. டாக்டர்—ஒருவேளை—உங்களுக்குச் சொல்லுவார்.

ரா. இந்த அறையிலேயே அடைக்கப்பட்டிருப்பது தான் எனக்கு பெரிய நோயாயிருக்கிறது.

ல. இப்படியிருப்பது உங்களுக்கு நிரம்பகுணத்தைச் செய்கிறதே.

ரா. என்ன குணமோ எனக்குத் தெரியாது வாஸ்தவமாய்!—அதிருக்கட்டும் சந்திரா எங்கே? இன்றைக்குச் சொல்வதாகச் சொன்னையே என்னிடம்?

ல. அவள்—உங்களுடைய—பெண்சாதி யல்லவென்று சொல்லுகிறார்களே.

ரா. என் பெண்சாதியா! என் மனைவியாரென்று எனக்குத் தெரியவும் தெரியாது—தெரியவும் வேண்டியதில்லை. என் உயிர் மணந்தது சந்திராவை; அவள் தான் என் பெண்சாதி; அவள் மீதுதான் மிகவும் ஆசை வைத்திருந்தேன். நீ எனக்குச் சொல்லாவிட்டால், நானே வெளியே போய் நாளைத்தினமே கண்டுபிடிப்பேன்; நீயும் இந்த டாக்டரும் சேர்ந்து என்னை என்னமோ ஏமாற்றுகிறீர்கள்.

ல. உங்களை ஏமாற்ற வேண்டும் என்னும் எண்ணம் எனக்குக்கொஞ்சமும் இல்லை. உங்களுக்காக நான் எவ்வளவு துயரப் படுகிறேன் என்பது அந்த ஈசனுக்குத் தெரியும்!

ரா. ஆம், அது எனக்குத்தெரியும்—நான் பார்த்தேன்—இன்றைத்தினம் காலை நான் சந்திராவைப்பற்றி விசாரித்த பொழுது உன் கண்களில் நீர்ததும்பியதை நான் கண்டேன்; அப்பொழுதே கேட்க வேண்டுமென்று வாயெடுத்தேன்—ஆயினும்—எப்படியோ—முடியாமற் போயிற்று.

இந்த வியாதியில், எனக்கு சிகிச்சை செய்ய நர்ஸாய் வருவதற்குமுன் என்னை உனக்குத்தெரியுமோ?

ல. ஏதோ கொஞ்சம்.

ரா. அப்படியிருக்கும் பொழுது எனக்காக ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய் ?

ல. அது என் கடமை—அதாவது—அது என் சுபாவம்.

ரா. இப்பொழுது எனக்கு ஞாபகம்வருகிறது—என் சொந்த சந்திரா கூட எனக்காகக் கண்ணீர்விட்டதில்லை ஒருபொழுதும்.

ல. உங்களுக்காக அழுதிருக்க மாட்டாள் வாஸ்தவத்தில்—உங்களுடைய பணத்திற்காக அழுதிருப்பாள் பலதரம்.

ரா. இதோ பார்! அவள் பேரில் இந்தமாதிரி யெல்லாம் பேசாதே! எனக்குக் கோபம் வரும்படி செய்யாதே. அவள் நிரம்ப நல்லவள்—என்மீது அவள் நிரம்ப ஆசை வைத்திருந்தாள் என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

ல. இருக்கலாம்—அவளுடைய வழியில்—ஆயினும் அதைப் பற்றி நான் ஏன் பேசவேண்டும்?

ரா. நான் உன்னைக் கேட்டுக்கொண்டிருந்தது நீ என்மீது வைத்த பட்சத்தைப் பற்றி—நீ என்மீது எவ்வளவு பட்சமாய் எனக்கு நன்மைசெய்திருக்கிறாய்!

ல. என்னுடைய கடமையைத் தான் நான் செய்தேன்.

ரா. நீ எவ்வளவு காலமாக நர்ஸாக இருக்கிறாய்?

ல. கொஞ்ச காலமாகத்தான்.

டாக்டர் நாயுடு வருகிறார்.

டா. ஓ! கிழவா! எல்லாம் சவுக்கியமாய் விட்டாற் போலிருக்கிறதே. நிரம்ப சந்தோஷம்—என்ன முகத்தை இறக்கிக் கொள்ளுகிறாய்? ஓகோ! நர்ஸிடட ஏதாவது ரகசியம் பேசிக்கொண்டிருந்தாயா? அப்படியா சமாசாரம்!

ல். என்ன டாக்டர், என்ன தான் நர்ஸாக இருந்த போதிலும், என்னை அவ்வளவு கேவலமாக எண்ணிவிடலாமா? இந்த மாதிரியாக நீங்கள் என்னைப் பரிஹாசம் செய்வது உங்களுக்கு நியாயமல்ல.

ரா. அப்படி யொன்றுமில்லை அம்மா! டாக்டர் ஒன்றும் தப்பாக எண்ணினவரல்ல. ஏன் டாக்டர்?

டா. சந்தேகமென்ன? எப்படி எண்ணுவேன்?—அது அசாத்தியம்.

ரா. டாக்டர், இந்த அறையிலேயே இன்னும் எத்தனை நாள் என்னை அடைத்து வைக்கப் போகிறீர்கள்?

டா. நீ இந்த அறைக்கு வெளியிலிருப்பதை யெல்லாம் மறக்கும் வரையில் உன்னை இங்கேயே ஏன் அடைத்து வைக்கலாகாது என்று யோசிக்கிறேன். அது என்ன கதிக்குக்கொண்டு வந்து விட்டது பார் உன்னை! நீ சாகக் கிடக்க இருந்தாய்; உன்னை இங்கு வீட்டிற்குக்கொண்டு வந்து, உயிர்தப்பவைத்தது, பிரம்மப் பிரயத்னமாயிற்று எனக்கு.

ரா. டாக்டர், அதற்காக உங்களுக்கு எப்பொழுதும் நன்றி பாராட்ட வேண்டியவனுயிருக்கிறேன். ஆயினும் சாயங்காலங்களில் இப்படி கொஞ்சம் வெளியில் சவாரி போய்வரலாகாதா நான்?

டா. இந்த அம்மாளை உன்னுடன் அழைத்துக் கொண்டுபோவதானால். இன்னும் சில தினங்கள் உன்னருகில் எப்பொழுதும் ஒரு நர்ஸ் இருக்க வேண்டியது அதி அவசியம்.

ரா. தினம் சாயங்காலங்களில் இந்த அம்மா என்னுடன் வருவதானால் எனக்கு நிரம்ப சந்தோஷம்—இவர்கள் நிரம்ப நல்லவர்கள், என்மீது மிகவும் பட்சமாயிருக்கிறார்கள் டாக்டர். இவர்கள் நான் எப்பொழுதும் ஈஸ்வரனை நினைக்கும்படிச் செய்கிறார்கள் என்னை, இவர்க

ளுடைய குரலைக்கேட்கும் பொழுதெல்லாம் இனிமேல் கெட்ட வழக்கங்களை யெல்லாம் விட்டு மிகுந்த யோக்கியமான மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்று என்னைத் தீர்மானம் பண்ணும்படிச் செய்கிறது.

டா. அவர்கள் மீது நீ இவ்வாறு பட்சம் வைத்திருப்பது எனக்கும் பிரீதியைத்தருகிறது.

ரா. பட்சமா? இவர்கள் மாத்திரம் எப்பொழுதும் என்பக்கத்தில் இருப்பதானால், என் ஆயுசெல்லாம் இப்படியே நோயாளியாயிருக்கக்கூடாதா என்றல்லவோ கோருகிறேன்.

டா. இது எனக்கு ஆச்சரியமாயில்லை—உனக்கு இவர்களை நன்றாய்த்தெரியாது இன்னும்—

ல. டாக்டர், இவர் இனிமேல் மருந்தும் மாத்திரைகளும் சாப்பிடமாட்டேன் என்று ஆட்சேபனைசெய்கிறார்.

ரா. இல்லை! நான் அப்படி ஆட்சேபிக்கவில்லை—நான் சொன்னதென்னவென்றால்—அவைகளை தினம் ஆறுதரம் விழுங்குவது தான் கஷ்டமாயிருக்கிறதென்றேன்.

டா. அது உதவாதப்பா, பழயபடி சவுக்கியமாகி நல்ல பலம் வருகிறவரையில் அதைச் சாப்பிட்டுத்தான் தீரவேண்டும்.

ரா. அப்படித்தான் செய்யவேண்டுமென்றால்—செய்கிறேன்.

டா இப்பொழுது எவ்வளவு வழிக்குவந்து விட்டாய் நீ! பெரிய வியாதியில் விழுந்தெழுந்தால்—குணம் எல்லாம் சரிப்பட்டுப்போகும்—நான் வருகிறேன்.

ரா. போய்வாருங்கள் டாக்டர்.

டா. நான் வருகிறேன்; அம்மா, அதிர்ஷ்டம்—நோயாளியின் மீது ஒரு கண்ணுயிரு—அதிருக்கட்டும், உன் கண்கள் எப்படியிருக்கின்றன? உன் கண்ணாடிகளை எடுத்து விட்டதை நான் கவனிக்கவில்லை.

ல. அவைகளை இன்னும் நான் போட்டுக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகத் தோன்றவில்லை எனக்கு.

டா. எதற்கும் போட்டுக் கொண்டிருந்தால்—நலமல்லவா ?

ல. இப்பொழுது எல்லாம் சரியாகிவிட்டது. அதை எந்நேரமும் போட்டுக் கொண்டிருப்பதென்றால் கஷ்டமாயிருந்தது; அன்றியும் இவர் தனக்கு ஏதாவது படிக்கும்படி என்னை அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ரா. இவர்களுடைய கண்களில் ஏதோ நோய் இருந்தது என்று எனக்குத் தெரியாது.—ஆயினும் இப்படிப்பட்ட கண்களை நீலக்கண்ணாடிகளால் மூடிவைப்பது என்னதுர் அதிர்ஷ்டம்! இவ்வளவு அழகிய கண்களை நான் பார்த்ததேயில்லை—அவைகள் மிகவும் ஆச்சரியமான சக்தியுடையன; அவைகளின் பார்வையினாலேயே என்னை சுவஸ்தப்படுத்துகிறது போலல்லவோ இருக்கிறது. இவர்கள் என்னை நேராகப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஏதோ ஒரு மாதிரியாயிருக்கிறது; அப்புறம், முன்னைவிட எனக்கு சுவஸ்தமாயிருக்கிறது என்று சொல்லுகிறார்களா, அப்படியே எனக்கு சுவஸ்தமாயிருக்கிறது!

டா. உம் உம்! ரொம்ப சந்தோஷம். இவருடைய வியாதியைத் தீர்ப்பதற்கு புது சிகிச்சையொன்று உன்னிடம் இருக்கிறாற் போலிருக்கிறதே! அந்த சிகிச்சையினால் இவர் வியாதி முற்றிலும் குணமாகுமாக ! நான் வருகிறேன்.

ரா. வாருங்கள்.

ல. சந்தோஷம்—வாருங்கள்.

காட்சி முடிகிறது.

## இரண்டாம் காட்சி.

இடம்—அதே வீட்டில் மற்றொரு அறை.

காலம்—இரவு

ராமநாதன் ஒரு சோபாவில் உட்கார்ந்து வர்த்தமானப்பத்திரிகை யொன்றை படித்துக்கொண்டிருக்கிறான்.
லலிதா வருகிறாள்.

ல. இவ்வளவு நாழிகை நீங்கள் படிப்பது உங்களுக்கு நல்ல தல்லவென்று நினைக்கின்றேன். இது உங்களுக்கு பல ஹீனத்தையுண்டு பண்ணும். அதிகமாய்ப் படிப்பது ஆயாசத்தையுண்டு பண்ணும்.

ரா. எனக்கு உடம்பு எல்லாம் சுவுக்கியமாகிவிட்டது, இனி யொன்றும் பயமில்லை.

ல. அப்படித்தான் டாக்டரும் நினைக்கிறார், ஆகவே நாளை முதல் நான் பார்க்கவேண்டியதில்லை என்று சொல் லுகிறார், இனி அவசியமில்லை என்று எண்ணுகிறார்.—

ரா. யார் அப்படிச் சொன்னது! டாக்டருக்கு என்ன தெரியும்? இன்னும் எனக்கு நன்றாய் சுவஸ்தமாகவில்லை! நீ நின்று விட்டால், என்னைப்பார்த்துக் கொள்ள இந்த வீட்டில் ஒருத்தருமில்லையே!

ல. எப்பொழுதும் இப்படியே—இங்கே இருக்க—என்றால் எப்படி முடியும்?

ரா. ஏன் முடியாது? ஆயுள்முழுவதும் நோயாளிகளாயிருப் பவர்களைப்பற்றி நீ கேட்டதில்லையா?

ல. அவ்வாறு நீர் இராதபடி ஸ்வாமி அருள்வாராக !

ரா. உம்—இருந்தாலும்—இன்னும் இரண்டு வாரமாவது நீ இருக்க முடியாதா?

ல. இருக்கலாம்.—ஆயினும்.—

ரா. ஆயினும்—என்ன?

ல. எனக்கு—என் வீட்டில் கொஞ்சம் முக்கியமான வேலையிருக்கிறது.

ரா. இன்னும் உனக்கு கலியாணமாக வில்லையே!—ஆய்விட்டதா என்ன?

ல. ஆகவில்லை என்று தான் நான் சொல்லவேண்டும்.

ரா. என்ன விந்தையானபதில்! அதைப்பற்றி உனக்கேதாவது சந்தேகமிருக்கிறதா என்ன?

ல. சந்தேகமில்லை—ஆயினும் வேறு ஒரு விஷயத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

ரா. நீ எப்பொழுது பார்த்தாலும் வேறு விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பது போலதான் தோற்றுகிறது—அது இன்னதென்று நான் கேட்கலாமோ ?

ல. பெண்ணாய்ப்பிறந்த ஒவ்வொருத்திக்கும் எத்தனையோ ரகசியங்களும் துக்கங்களும் இருக்கலாம்.

ரா. என்னை மன்னிப்பாய்!—நீ மற்ற ஸ்திரீகளைப் போலவன்று என்று எண்ணினேன்—ஒருவிதத்தில்.

ல. அல்ல அல்ல—எவ்விதத்திலும்.

ரா. டாக்டர் உன்னை என்னமோ விந்தையான பெயரிட்டழைத்தாரே—உன் பெயர் என்ன?

ல. என் முழுப்பெயர் அதிர்ஷ்டலட்க்ஷ்மி; சாதாரணமாக அதிர்ஷ்டம் என்று என்னைக் கூப்பிடுகிறார்கள் என்னைத் தெரிந்தவர்கள்.

ரா. அதிர்ஷ்டம்-அந்தப் பெயர் ஒரு மாதிரியாயிருக்கிறது—என் மனதுக்கு திருப்திகரமாயில்லை—அம்மா—என்னை மன்னிப்பாய், அந்தப் பெயரை மாற்றிக்கொள்ள மாட்டாயா கொஞ்சம்?

ல. மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்—என்புருஷன் கிடைத்தவுடன்.

ரா. அது எப்பொழுது நேரிடும்? சீக்கிரத்திலா?

ல. அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

ரா. உன்னுடைய கலியாணத்திற்கு என்னை அழைக்க மாட்டாயா?

ல. உமக்கு இஷ்டமிருந்தால்.

ரா. அதற்கு சந்தேகமென்ன, சந்தோஷமாய் வருகிறேன்—ஆயினும் உனக்குக் கணவனாகப் போகிறவர்யார்? ஒரு வேளை அவரை எனக்கு தெரியுமோ?

ல. நான் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஒரு வேளை அவரை நீர் கொஞ்சம் அறிந்திருந்தாலுமிருக்கலாம் இப்பொழுது—பிறகு அவரை நீங்கள் நன்றாக அறிவீர்களெனக் கோருகிறேன்.

ரா அவர்பெயர்?

ல. சமயம் வரும்பொழுது சொல்லுகிறேன்—உமக்கு நான் அவரைக்காண்பிக்கும் வரையில் நீர் பொறுக்க வேண்டும்.

ரா. எப்பொழுது செய்வாய் அதை?

ல. ஒரு வேளை நீங்கள் நினைப்பதன் முன்பாக இருக்கலாம்.

ரா. உம்! அப்பொழுது அவர்மீது நான் என்ன பொறாமை கொள்வேன் தெரியுமா?

ல. ஏன்?

ரா. இவ்வளவு கற்றறிந்த, புத்திசாலியான, பட்சமுடைய, பெண்மணியைப் காதலியாகப்பெற்றாரே யென்று.

ல. என்னை அதிகமாகப் புகழ்ந்து நாணத்தால் வெட்கப் படும்படிச் செய்கிறீர் நீர்!

ரா. இல்லை—நான் சொல்வதை நம்பு—வாஸ்தவமாக என் மனத்திற் பட்டதையே உரைத்தேன்.

ல. உம்முடைய மனைவி இங்கு உமது எதிரில் இல்லாதபடியால் அவ்வாறு பேசுகிறீர்.

ரா. அவள் என் எதிரில் இருந்த போதிலும் அப்படியே சொல்லியிருப்பேன், அந்தப் பெண்ணுக்கு நான் பயப்படுபவனல்ல !

ல. அவள் என்ன புத்திசாலியல்லவா? படித்தவளல்லவா?

ரா எனக்கு தெரியாது—அப்படியிருக்கமாட்டாள்.

ல. அதென்ன அப்படி சந்தேகத்துடன் பேசுகிறீர்? உம்முடைய சொந்த மனைவியைப் பற்றி இது தெரியாமலிருக்குமா உமக்கு?

ரா. வாஸ்தவமாய்—எனக்குத் தெரியாது.

ல. என்ன கல்மனதுடையவர்கள் ஆண்மக்கள்? என்ன துஷ்டர்கள்! என்ன குரூரமானவைர்கள் !

ரா. நானாக அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லையே! அவளை எனக்குக் கட்டிவைத்தார்கள். அவளைப் பற்றி எப்பொழுதும் நான் கவனித்தவன் அன்று.

ல. ஒருவேளை அவள் கற்றறிந்த, புத்திசாலியான, பட்சமுடைய காதல்குன்றுப் பெண்மணியாயிருந்தாலோ?

ரா. அதெல்லாம் எனக்குத் தெரியாது!

ல. நீர் தெரிந்து கொள்ள வேண்டியது உம்முடைய கடமையல்லவா ? என்ன நினைக்கிறீர் ?

ரா. அதைப்பற்றி நான் எப்பொழுதும் யோசிக்கவேயில்லை.

ல. ஜகதீசன் உம்மை மன்னிப்பாராக !

ரா. இந்தப்பதினைந்து தினங்களாக காலையில் நீ பரமேஸ்வரனைக் குறித்துப் பிரார்த்தனை செய்வதைக் கண்டபின் தான் அவரிடம் எனக்குக்கொஞ்சம் நம்பிக்கை பிறந்திருக்கிறது. அப்படி நீ பிரார்த்தனை செய்யும் பொழுதெல்லாம் நீ ஏதோ எனக்காகப் பிரார்த்தனை செய்வது போல் என் புத்தியிற் பட்டது; அது என்ன காரணத்

தால் என்று என்ளுல் சொல்லமுடியாது. ஒவ்வொரு முறையும் உன்னை, நான் கவனிக்கும் போதெல்லாம் எனக்குள் ஏதோ ஒரு மனவெழுச்சி உண்டாச்சுது—அதை இன்னதென்று விவரமாய்ச் சொல்லமுடியவில்லை என்ளுல்—இதை விட மேலான நிலையை நாடவேண்டும் என்பதே போல். இனியாவது நான் பரிசுத்தனுகி நற்பெயரெடுத்து வாழவேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்.

ல. ஆ—எனக்கு மிகவும் சந்தோஷம்! நீர் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்டீர்—மரணத்தினும் கேடான கதியினின்று காப்பாற்றப்பட்டீர்.

ரா. உன்ளுல்!

ல. ஜகதீசனுல்!

ரா. நீமாத்திரம் எப்பொழுதும் என் பக்கத்திலிருப்பதாளுல் நான் பரிசுத்தனுகி என்வாழ் நாட்களை நல்லவழியில் கழிப்பது மிகவும் சுலபமாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது. போனதையெல்லாம் அடியுடன் துடைத்துவிட்டு, புதிதாய் எல்லாம் ஆரம்பிப்பேன்!

ல. அப்படியா?—நான் அப்படியே செய்கிறேன் என்று வாக்களித்தால், எனக்காக என்ன செய்வீர்?

ரா. எது வேண்டுமென்ருலும்!

ல. சத்தியமாய்?

ரா. பிரமாணமாக!

ல, ஆளுல்—உம்முடைய சொந்த மனைவியை யடைந்து—அவளுடன் வாழ்கிறீரா?

ரா. உம்—செய்கிறேன்—முயல்கிறேன்.

ல. பிரமாணம் செய்யும்,

ரா. ஆகட்டும்—பிரமாணமாக.

ல. நான் போய் உம்முடைய மனைவியை அழைத்துவரவா?

ரா. அவள் என்ன, இந்த வீட்டிலா இருக்கிறாள்?

ல. அருகாமையில்.

ரா. வாஸ்தவமாகவா?

ல. இதோ ஐந்து நிமிஷத்தில் வருகிறேன். [போகிறாள்.]

ராமநாதன் எழுந்து உலாவுகிறான்.

ரா. இதெல்லாம் என்னவோ ஆச்சரியமாகத் தோன்றுகிறது! நான் ஏன் பிரமாணம் செய்தேன்?—அவளுடைய கண்கள் என்னை அவ்வாறு செய்யச் செய்தன—அவள் கேட்ட பொழுது மறுக்கமுடியவில்லை என்றால்—இதெல்லாம் எப்படி முடியப்போகிறதென்று ஆச்சரியப்படுகிறேன்!

லலிதை தன் சொந்த உடையில் வருகிறாள்.

ரா. (ஆச்சரியத்துடன்) யார் இது என் கண்ணெதிரில் படுவது?

ல. இது வரையில் உமக்கு நர்ஸாகவிருந்த—உம்முடைய சொந்த கற்புடைய மனைவி—உம்முடைய லலிதா!

ரா. இது உண்மைதானா?—அல்லது நான் கனவு காண்கிறேனோ?

ல. இல்லை—கனவல்ல—நினைவு தான்!

ரா. ஈசனே! என்னை மன்னிப்பீராக!

ல. அவர் முன்பே உம்மை மன்னித்து—இனியாவது நல்வாழ்வு வாழும்படியாக அனுக்கிரகம் செய்திருக்கிறார்.

ரா. உன் பொருட்டு!—கண்ணே! என் காதலியே! லலிதா! [கட்டிமுத்தமிடுகிறான்.]

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

Dowden & Co., Madras